20.08.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஓ.எஸ்.எண்.204 /2018) திரு.சாமிராஜ்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடாச்சி -</u>

1) சங்கத்தில் மகாசப்பை கூட்டம் நடைபெற்றதாகவும் அதில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் சொல்லி நான் தாக்கல் செய்துள்ள தீர்மானங்கள் சாதாரண பேப்பரில் தான் உள்ளது என்றால் பாண்ட் பேப்பரில் உள்ளது. சங்கத்திற்காக தீர்மான நோட்புக் அல்லது மினிட் புக் பராமரிப்பது தான் விதி என்றால் ஆமாம். ஆனால் ஒருமுறை சங்கத்தின் உறுப்பினரான குருசாமியின் மேற்படி தீர்மான நோட்டு புத்தகம் கூறைவீட்டில் இருக்கும் போது முழுவதும் தீயில் எரிந்து சாம்பலாகிவிட்டது. தீப்பிடித்து எரிந்தது எந்த வருடம் என்றால் நான் பள்ளிக்கூடம் செல்லும் காலத்தில் நடைபெற்றது. நான் 8 வது வகுப்பு பள்ளிபடிப்பு எந்த ஆண்டில் முடித்தேன் என்றால் 1972 -1973-க்குள் இருக்கும். அந்த காலகட்டத்திற்கு முன்பாகவே தீ எரிந்துவிட்டது என்று சொல்லுகிறேன் என்று சொல்லுகிறேனா என்றால் நான் 8 வது படிக்கும் காலத்தில் 1972-1973 ல் தான் எரிந்தது. அதன்பின்பு 1973 க்கு பின்னர் சங்கத்திற்கு தீர்மானப்புத்தகம் பராமரிக்கவில்லை என்பது எனது தரப்பு என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் யாரையும் கேட்கவில்லை பொறுப்பில் யார் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். தீ எரிந்து போனதாக சொல்லும் காலத்தில் சங்கத்தில் பொறுப்பில் யார் யார் என்றால் தலைவராக காளையன் மகன் கோட்டியப்பன் என்பவரும்,பாண்டியன் மகன் கோவில்பிள்ளை உபதலைவராகவும்,இன்னாசிமுத்து மகன் மாடசாமி காரியதரசியாகவும், சின்ன காட்டுமாடன் மகன் சாமிகண்ணு பொருளாராகவும் பதவியில் இருந்தார்கள். இவர்கள் தொடர்ந்து இறக்கும் வரை பதவியில் இருந்து வந்தார்கள். 1973 ல் நான் இளவராக இருந்து வந்தேன் என்றால் சரிதான். அதன்பின்னர் உரிய வயதடைந்து கூட்டுறவு துறையில் பணியில் சேர்ந்து கூட்டுறவு துறையில் பதிவு செய்யப்படும்சங்கங்களின் விதிகள் மற்றும் பாராமரிக்கப்படும்ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறான ஆவணங்கள் எதுவும் எனது கையில் கிடைக்கவில்லை என்றால் ஆமாம். யாரும் ஆவணங்களை பராமரிக்கப்படவில்லை நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான்.

2) நாங்கள் கிரையம் வாங்கிய போது இருந்த காரியதரசி உறுதியாக சொன்னார். அவரிடம் தான் நிலம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இருந்தது. கிரையம் பெறும் போதே நாங்கள் அவரிடமிருந்து உரிய ஆவணங்களை வாங்கினோமா என்றால் இல்லை

பத்திரம் பதிவு முடித்தவுடன் எனது தந்தை முலமாக ஆவணத்தை வாங்கினோம். எனது தந்தை மூலமாக ஆவணங்கள் வாங்குவதற்கு அனுமதி கடிதம் பிரதிவாதிகளோ அல்லது நானோ எழுதிக்கொடுத்தோமா என்றால் இல்லை. கிரையம் முடிந்தவுடன் சொத்து சம்பந்தமான மூல ஆவணங்கள் அனைத்தும் 1,2 பிரதிவாதிகள் வசம் கொடுக்கப்பட்டு விட்டது. சங்கம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சங்கத்தின் செயலாளர் மாடசாமி மூலம் எனது தந்தை வசம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் எனது தந்தை வாங்கிக்கொள்வதற்கு பிரதிவாதிகள் எந்த கடிதமும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. அதனால் ஆவணங்கள் 1,2 பிரதிவாதிகள் வசமும், எனது தந்தை வசமும் இருப்பது 2007-லிருந்தே தெரியும் என்றால் தெரியும். ஆவணங்களை விசாரணை சமயத்தில் தாக்கல் செய்தது தேடிப்பார்த்து தாக்கல் செய்ததாக நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. ஒரு பிரதிவாதி எனது மனைவி மற்றொரு பிரதிவாதிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்றால் தவறு ஒன்றுவிட்ட அண்ணனின் மனைவி ஆவார். எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லாமல் தற்போது சொல்லுகிறேன் என்றால் அந்த நேரத்தில் சொல்லவில்லை. 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்து சாட்சியம் அளிப்பதற்கு இவ்வாறு மேற்படி சங்கதிகளை கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிடமிருந்து தேடிப்பார்த்து ஆவணங்களை தாக்கல் செய்ததாகசொல்லுவதும் 1,2 பிரதிவாதிகளுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றிய முழுவிவரமும் எனக்கு தெரியும் என்றாலும் அது குறித்து பதில் அளிக்கமுடியும் என்றால் சரிதான். சங்க பதிவேட்டிலிருந்து நீக்கம்செய்யப்பட்டதற்கான திருநெல்வேலி பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட சான்று பி.வா.சா.ஆ.2 எப்போது யாரால் வாங்கப்பட்டது என்று சொன்னால் சங்கத்தின் செயலாளர் மாடசாமி என்பவரால் வாங்கப்பட்டது.நிலம் விற்பனை செய்யப்பட்ட போது நாங்கள் அதை பார்த்தோம் எனது அப்பாவிடம் கொடுத்துள்ளார். அது எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சரியான தேதி சொல்லமுடியும். ஆவணத்தை பார்க்காமல் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

3) சொத்துக்கள் வேப்பங்குளம் ஜவஹர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர்கள் தொடர்ந்து அனுபவிப்பதற்காக வாங்கப்பட்டது என்றால்

சரிதான். சொத்து 1969,1970 ஆம் ஆண்டிலேயே சங்கத்தின் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சங்கத்தின் பெயரிலேயே வருவாய்துறை ஆவணங்கள் மற்றும் 10(1) அடங்கல் சங்கத்தின் பெயரில் மாற்றப்பட்டது என்றால் சரிதான். சங்கத்தின் பெயருக்கு மாற்றப்பட்ட பின்னர் தனிப்பட்ட நபர்கள் யாருக்கும் பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 1995 லெட்சுமணன் மகன் செல்லையா என்பவர் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு பதிவு செய்த வக்காலத்து ஆவணம் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி லெட்சுமணன் மகன் செல்லையாவுக்கு எந்த ஒரு உரிமையும் இல்லாத நிலையில் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஏன் என்றால் சங்கத்தின் ஒரு உறுப்பினர் லெட்சுமணன் வாங்கி சங்கத்திற்கு கொடுத்துள்ளார் பட்டா மாறுதல் இல்லாததால் அவரது வாரிசான செல்லையாவிடம் பின்னர் எழுதி வாங்கப்பட்டது. இந்த விவரம் சங்கத்தின் செயலாளர், உறுப்பினர்களுக்கு தெரிந்திருக்கும் என்றும் யார் மூலமாக எனக்கு தெரியவந்தது என்றால் எனது அப்பாவின் மூலமாக எனக்கு தெரிய வந்தது. தற்போது காண்பிக்கப்படும் தாவாச்சொத்திற்குரிய அடங்கல் நகல் என்றால் ஆமாம். இந்த ஆவணம் 1995 ஆம் ஆண்டுக்கு முன்பு சங்கதின் பெயரிலான ஜவகர் விவசாய சங்கத்தின் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி 1995 ஆம் ஆண்டுக்கு முன்னரே சங்கத்தின் பெயருக்கு வருவாய்துறை ஆவணங்கள் மாற்றம் ஏற்பட்டது என்பதால் நான் சொல்லுவது போன்று லெட்சுமணன் மகன் செல்லையா பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் ஒரு சர்வே எண்ணிற்கு பட்டா மாறுதல் இல்லை. அவருடைய சந்தியினர் உரிமை கோரக்கூடாதென்று அவ்வாறு எழுதிக்கொடுக்கப்பட்டது. எனது நிருபண வாக்குமூலம் பி.வா.சா.ஆ.4 ல் என்னசொல்லப்பட்டுள்ளது என்று நிருபண வாக்குமூலத்தை காண்பித்து சாட்சியிடம் கேட்ட போது லெட்சுமணன் மகன் செல்லையா சங்கச்சொத்துக்களை பராமரிக்க கிரையம் செய்து கொடுக்க, அடமானம்,ஒத்தி கொடுக்க, வில்லங்கம் செய்ய பொருப்பாளர்களை முகவர்களாக நியமித்து பதிவு செய்துகொடுக்கும் வகைக்கு பொது வக்காலத்து ஆவணம் என்று காண்பிக்கப்பட்டுள்ளது.

4) நான் சொல்லுவது போன்று ஒரு சர்வே எண்ணிற்கு மட்டும் இல்லாமல் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களுக்கும் பி.வா.சா.ஆ.4 சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் சங்கத்தின் நலன் கருதி அனைத்து

சொத்துக்கள் என்று போடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.5 தெற்கு மயிலோடை செல்வராஜ் மற்றும் மூவருக்கு சங்கத்தின் சொத்துக்கள் விற்பக்கப்பட்டதற்கான சங்கத்தின் ஒப்பந்தம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஒப்பந்தத்தில் சங்கத்திற்கு நிதி நெருக்கடி உள்ளது என்பதால் விற்பனை செய்யவேண்டும் என்ற வாசம் இல்லை என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படாமல் நின்றுவிட்டது என்றால் சரிதான். ஏன் என்றால் உரிய காலத்திற்குள் பத்திரம் பதிவு செய்ய வரததால் அந்த ஆவணம் முடிந்து விடுவதாக ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சொல்லும் விளக்கம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றும் யார் மூலமாக எனக்கு தெரிய வந்தது என்றால் சங்க செயளர் சொன்னார் பத்திரம் கொடுத்ததில் பார்த்து தெரிந்து கொண்டேன். ஒப்பந்தம் போட்ட நபர் எனது பக்கத்து ஊரில் தான் இருந்து வருகிறார் என்றும் அவரிடம் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். சங்கத்திற்குரிய சொத்தாக இருப்பதால் அதை பத்திரம் முடிக்க முடியாது என்று சொல்லி விட்டதால் கிரைய ஒப்பந்தப்படி செயல்படுத்த முடியவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
20.08.2025.